ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீமத் பகவத் பாஷ்யகாரர் திருமந்த்ரார்த்தம் உபதேசமாகப் பெறவேண்டி, பதினெட்டு முறை திருக்கோட்டியூருக்கு எழுந்தருளியபோழுது, ஸ்ரீமத் பகவத் பாஷ்யகாரருக்கு ஸ்ரீமத் திருக்கோட்டியூர் நம்பிகள் அருளிச்செய்த பதினெட்டு வார்த்தை

1. மோக்ஷத்தில் இச்சை உடையவனுக்கு ஸம்ஸாரவித்து நசிக்க வேண்டும்.
2. ஸம்ஸாரவித்து நசித்தால் ஒழிய அஹங்கார மமகாரங்கள் ஒழியமாட்டா.
3. அஹங்கார மமகாரங்கள் ஒழிந்தால் அன்றி உடல் பற்று போகாது.
4. உடல் பற்று போனால் ஒழிய ஆன்ம ஞானம் பிறக்கமாட்டாது.
5. ஆன்ம ஞானம் பிறந்தால் அன்றி, செல்வம் போகம் இவற்றில் வெறுப்பு பிறக்கமாட்டாது.
6. செல்வம் போகம் இவற்றில் வெறுப்பு உண்டானால் அன்றி எம்பெருமானிடத்தில் ப்ரேமம் பிறக்கமாட்டாது.
7. பகவத் ப்ரேமம் பிறந்தால் ஒழிய ருசி நீங்காது.
8. விஷயாந்தர ருசி நீங்கினால் ஒழிய பாரதந்த்ரியம் பிறக்கமாட்டாது.
9. பாரதந்த்ரியம் பிறந்தால் ஒழிய அர்த்த, காம, ராக த்வேஷங்கள் நீங்கமாட்டாது.

10. ராக த்வேஷங்கள் நீங்கினால் ஒழிய ஸ்ரீவைஷ்ணவத்வம் கைகூடாது.

11. ஸ்ரீவைஷ்ணவத்வம் கைகூடினால் ஒழிய ஸாத்வீக பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

12. ஸாத்வீக பரிக்ரஹம் பிறந்தால் ஒழிய பாகவத பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

13. பாகவத பரிக்ரஹம் பிறந்தால் ஒழிய பகவத் பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

14. பகவத் பரிக்ரஹம் பிறந்தால் ஒழிய அநந்ய ப்ரயோஜநன் ஆகமாட்டான்.

15. அநந்ய ப்ரயோஜநன் ஆகாதே அநந்யார்ஹ சேஷபூதன் ஆகமாட்டான்.

16. அநந்யார்ஹ சேஷபூதன் ஆகாதே அநந்ய சரணன் ஆகமாட்டான்.

17. அநந்ய சரணன் ஆகாதே அதிகாரி புருஷன் ஆகமாட்டான்

18. அதிகாரி புருஷனாக ஆனவனுக்கே திருமந்த்ரார்த்தம் கைகூடும்.

********************

நன்றி: உபநிஷத் கதைகள் & நற்போது போக்கு (ஸதுபதேசம் - 5). ஆசிரியர்: ஸ்ரீமதுபயவே. ஸ்ரீபாஷ்ய ஸாராம்ருதவர்ஷீ. ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநம். ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹம். புரிசை. நடாதூர். ஸ்ரீக்ருஷ்ணமார்ய மஹாதேசிகன்.

அனுமதி அருளியமைக்காக அநந்தகோடி க்ருதஜ்ஞதாரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்: ஸ்ரீ உ.வே. புரிசை. நடாதூர். ஜகன்னாதாசார்ய ஸ்வாமி, மேற்கு மாம்பலம்.